# அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 118/2017 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R. இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2024ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 01-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 01.10.2024 |
| பெயர் விஜயன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

1. தாவா சொத்தின் விவரம் எனக்கு தெரியும் எண்.10பி. சத்தியாவதி நகர் முதல் தெரு சென்னை 50. மேற்படி சொத்தில் கட்டிடம் உள்ளது. 1986 கட்டப்பட்டு இருந்த கட்டிடத்தை நான் வாங்கினேன். அதன் விஸ்திரனம் 1200 சதுரஅடி. மேற்படி கட்டடம் வீட்டுஉபயோகத்திற்கானது. தற்போது அங்கு நான் கிரைன்டர் வைத்து மாவுஅறைக்கிறேன். மேலும் கிரைன்டர் பழுதுபார்க்கவும் செய்வேன். மேற்படி கட்டிடத்தில் ஒரே ஒரு வீடுதான் உள்ளது.

2. நான் சொத்து வாங்கும் போது மின்இணைப்பு திரு.சந்திரசேகர் ராவ் என்பவர் பெயரில் இருந்தது. தற்போது கட்டிடத்தின் மின்இணைப்பு

பிரதிவாதி பெயரில் உள்ளது. நான் 1986ல் இருந்து தாவா சொத்தில் குடியிருக்கிறேன். முன்பு மின்இணைப்பு எண்பெயரில் இருந்தது தற்போது இல்லை.

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)